**D.V.C. 23 of 2022** **Previous Date : 06.05.2024**

**PW1**

**பிரைந்தி க/பெ.நிசாந்த்**

**09.04.2026**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.04.2026.**

**<u>1,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னுடைய பழைய E–mail Id ஆனது brainthi@gmail.com என்றால் சரிதான். 2020 அக்டோபருக்கு பிறகு என்னுடைய E–mail Idஐ brainthi1427@gmail.com என்று வைத்துள்ளேன் என்றால் சரிதான். brainthi1427@gmail.com என்ற Idல் இருந்து 08.05.2022ம் தேதி 1ம் எதிர்மனுதாரருக்கு Mail அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய இந்த Mailக்கு 1ம் எதிர்மனுதாரர் 11.05.2022ம் தேதி பதில் Mail அனுப்பினார் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் அசோக்கிற்கு நான் brainthi@gmail.comல் இருந்து 07.12.2014ம் தேதி Mail அனுப்பினேன் என்றால் நான் 15 வருடங்களானதால் நான் அதை Use பண்ணவில்லை, அதனால் தெரியவில்லை. எனது Facebook Id என்பது brainthirajkumar என்றால் நான் முன்பு Facebook பயன்படுத்தினேன், என்னுடைய Facebook கணக்கை Delete செய்துவிட்டேன், அப்போது இந்த Id வைத்திருந்தேன். நான் Facebook Id Delete செய்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் வருடங்கள் ஞாபகமில்லை. நான் 2020 வரை மேற்சொன்ன Facebook IDயை பயன்படுத்தி வந்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 7708896496 என்ற செல்போன் எண்ணை நான் வைத்திருந்தேன் என்றால் ஆமாம், என் கணவர் வாங்கி கொடுத்திருந்தார். இந்த போன் எண்ணை ஜனவரி 2017ல் இருந்து பிப்ரவரி 2020 வரை வைத்திருந்தேன் என்றால் 2019ல் என் கணவர் வாங்கிவிட்டார். மேற்படி 7708896496 எண்ணில் இருந்து 9952509851 என்ற கார்த்திக் சிவராம் என்ற நபருக்கு Whatsapp message அனுப்பினேன் என்றால் இல்லை. மேற்படி அந்த 7708896496 எண்ணில் இருந்து பல எண்களுக்கு Whatsapp மூலம் Message அனுப்பிய 1834 Chatகளும், 33 Attachmentகளும் இருந்தது என்றால் இல்லை. 16.05.2022ம் தேதி அன்று கடலூரில் ஒரு புகாரும், 18.05.2022ம் தேதி பழனியில் ஒரு புகாரும் கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் Facebook, whatsapp, Email ல் ஆண்நண்பருடன் கூடா நட்பில் இருந்ததால் அதை தெரிந்து 1ம் எதிர்மனுதாரர்

கண்டித்ததால் கோபப்பட்டு மேற்படி இரண்டு பொய்புகார்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, அப்படி இல்லை. எனது Facebook, whatsapp, Email ல் இருந்து சென்ற Messageகள் என்னால் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேச சிறப்பு பயிற்சி வகுப்பு எடுத்து கொண்டிருக்கிறேன் என்றால் இல்லை, எடுத்தேன். நான் பள்ளி குழந்தைகளுக்கு தனியாக Tuition எடுத்து கொண்டிருக்கிறேன் என்றால் Private Institutionல் நான் Tuition எடுக்கிறேன். நான் அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில சிறப்பு வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றாலும் அது பற்றி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் நடவடிக்கை எடுக்க சொல்லி 2ம் எதிர்மனுதாரர் நடவடிக்கை எடுத்ததால் நான் பொய்யாக 2ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால் நான் பொய்யாக புகார் கொடுக்கவில்லை. நான் அங்கு வேலை பார்க்கவில்லை என்றால் அதை பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றால் நான் வேலை பார்த்தேன், தற்போது வேலைப்பார்க்கவில்லை. தற்போது எவ்வளவு நாட்களாக வேலை பார்க்கவில்லை என்றால் ஒரு மாதமாக வேலை பார்க்கவில்லை. நான் தற்போதும் அந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்பு எடுக்கும் வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்றாலும் தற்போது பொய்யாக அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்பு எடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. நான் மேற்படி ஆங்கில சிறப்பு வகுப்பு மற்றும் Tuition மூலம் வரும் வருமானத்தை வைத்து தற்போது Tata zest கார் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆங்கில சிறப்பு வகுப்பு நடத்தியதற்கு அமைச்சரிடம் இருந்து சிறப்பு பரிசு வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். நான் GWOP மனுவில் எனக்கு வருமானம் இருக்கிறது என்றும், குழந்தையை பார்த்து கொள்கிறேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் இந்த வழக்கு மனுவில் எனக்கு வருமானம் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் போதிய வருமானம் இல்லை என்று சொல்லியுள்ளேன். வழக்கமாக படுக்கையறை ஜன்னல் பெரியதாகவும், குளியலறை ஜன்னல் சிறியதாகவும் இருக்கும் என்றால் பொதுவாக அப்படி தான் இருக்கும். நான் கார்த்திக் சிவராம்க்கு அனுப்பிய புகைப்படத்தில் பின்புறத்தில் பெரிய ஜன்னல் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் என் கணவர் வீட்டில் வாழ்ந்த சமயத்தில் என் தாயாருக்கு போனில் பேசும்போது

வரதட்சனை கொடுமை செய்கிறார்கள் என்று என் தாயாரிடமும், என் தாயாரின் சகோதரியிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான், எல்லா விசயத்தையும் எப்படி சொல்வது என்று சொல்லவில்லை. நான் மனுவில் சொல்லியுள்ளதுபோல் ஒரு விசயமாவது நடந்திருந்தால் நான் என் பெற்றோரிடம் சொல்லியிருப்பேன் என்றால் நான் சந்தோசமாக சாப்பிடுகிறேன் என்று தான் சொன்னேன், எனது கணவர் வீட்டில் நடந்த சம்பவங்களை என் பெற்றோர் வீட்டில் சொல்லவில்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால்தான் என் தாயாரிடமும் சொல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்திலும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல, காவல் நிலையத்தில் சொல்லியுள்ளேன். நான் சொன்னதுபோல் உண்மையில் சம்பவங்கள் நடந்திருந்தால் இந்த வழக்கை நடத்திருப்பேன் என்றாலும் நான் 1ம் எதிர்மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் அலகளிக்க வேண்டும் என்றும் இந்த வழக்கை இப்படி நடத்துகிறேன் என்றாலும் சரியல்ல, நான் தான் அலகளிக்கப்படுகிறேன். கடலூரில் ஒரு வழக்கும், பழனியில் மூன்று வழக்குகளும் நடக்கிறது என்றால் சரிதான். அதனால் எதிர்மனுதாரர்கள் தான் அலகளிக்கப்படுகிறார்கள் என்றால் சரியல்ல. ஒவ்வொரு மனுவிலும் முன்னுக்குபின் முரணான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவில் எந்த உண்மையும் இல்லாததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.04.09 19:22:55 +0530